மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 128/2017

பெயர் : அம்மணியம்மாள்
சாட்சி – வா.சா–3 நாள்:19.072025

---

**குறுக்கு விசாரணை (1 முதல் 3, 7 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பு)**

1. எனக்கு 85 வயது ஆகிறது. வழக்கு போடப்பட்டுள்ள சொத்துக்களை பற்றி எனக்கு ஆரம்பத்தில் இருந்தே தெரியும் என்றால் சரிதான். மேற்படி சொத்து பேச்சியம்மாள் என்பவர் விலைக்கு வாங்கிய சொத்து என்றால் சரிதான். பேச்சியம்மாள் காலி இடமாக இருந்ததை விலைக்கு வாங்கி வீடு கட்டி உயிருடன் இருக்கும் வரை குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். பேச்சியம்மாளுக்கு பழனியம்மாள், பொன்னியம்மாள் என்ற மகள்களும், நடராஜன் என்ற மகனும் வாரிசுகள் என்றால் சரிதான்.

2. பேச்சியம்மாள் இறந்து சுமார் 50 அல்லது 60 ஆண்டுகள் இருக்கும். பேச்சியம்மாளின் மகள் பழனியம்மாள் இறந்து எவ்வளவு ஆண்டுகள் இருக்கும் என்று எனக்குத் தெரியாது. பழனியம்மாளுக்கு சண்முகம், தங்கவேல், ஆறுமுகம், மற்றும் ராமு ஆகிய நான்கு மகன்கள், அம்சம்மாள், ருக்மணி மற்றும் சரஸ்வதி ஆகிய மூன்று மகள்கள் என்றால் சரிதான். நடராஜன் இறந்து சுமார் 47 வருடங்கள் இருக்கலாம் என்றால் சரிதான். நடராஜனுக்கு ராமராஜ், கோபால் மற்றும் பழனிச்சாமி என்ற மூன்று மகன்களும், பங்காரு அம்மாள், துளசி அம்மாள் என்ற இரண்டு மகள்களும் உள்ளனர் என்றால் சரிதான். அவர்களில் கோபால் என்பவர் இறந்து விட்டார் என்றால் சரிதான். கோபாலின் மனைவி பெயர் சரோஜா என்றால் சரிதான். கோபாலின் மகள் பெயர் பாரதி, மற்றும் மகன் பெயர் பன்னீர்செல்வம் என்றால் சரிதான்.

3. நடராஜனின் மகள் துளசி அம்மாள் என்பவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். துளசி அம்மாவுக்கு குமார் மற்றும் மணிகண்டன் என்ற இரண்டு மகன்களும், லதா என்ற ஒரு மகளும் என்றால் சரிதான். நடராஜன் மகன் ராமராஜன் என்பவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி ராமராஜ் தான் எனது மருமகன் என்றால்

சரிதான். ராமராஜுக்கு எனது மகள் இரண்டாவது மனைவி என்றால் முதல் மனைவி பற்றி எனக்கு தெரியாது. முதல் மனைவியின் பெயர் புஷ்பா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ராமராஜின் முதல் மனைவிக்கு தனம் என்ற மகள் இருந்தார் என்றால் ராமராஜுக்கு முதல் மனைவி இருந்த விபரமே எனக்கு தெரியாது.

4. இந்த வழக்கின் முதல்வாதி பழனியம்மாள் மேற்படி ராமராஜின் இரண்டாவது மனைவி என்றால் மனைவி என்பது மட்டும் தான் எனக்கு தெரியும் இரண்டாவது மனைவி என்ற விவரம் எனக்கு தெரியாது. பழனியம்மாளுக்கு இரண்டு மற்றும் மூன்று வாதிகள் மகன் மற்றும் மகள் ஆவார்கள். பேச்சியம்மாளின் மகள் பொன்னியம்மாள் என்பவர் எங்கு இறந்தார் என்றால் கர்நாடக மாநிலம் பல்லாரியில் இறந்தார். பொன்னியம்மாள் கர்நாடக மாநிலம் பல்லாரியில் அவரது மகனுடன் இருந்து அங்கே இறந்து விட்டார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

5. நான் பொன்னியம்மாள் என்பவரை பார்த்ததே கிடையாது. பொன்னியம்மாளுக்கு உள்ள வாரிசுகள் பற்றி எனக்கு தெரியாது. ராமராஜன் சகோதரர் பெயர் பழனிச்சாமி 11ம் பிரதிவாதியாக இந்த வழக்கில் உள்ளார் என்றால் சரிதான். 11ம் பிரதிவாதியின் மனைவியின் பெயர் வசந்தா என்றால் சரிதான். வசந்தாவை பல்லாரியில் இருந்து திருமணம் செய்த அழைத்து வந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பொன்னியம்மாளுக்கு பொன்னுசாமி என்ற மகன் இருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6. பொன்னுசாமியின் மகளை தான் 11ம் பிரதிவாதி திருமணம் செய்து கொண்டுள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தின் ஒரு பகுதியில் ஏழாம் பிரதிவாதி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். மற்றொரு பகுதியில் 11ம் பிரதிவாதியும் அவரது மனைவியும் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். பேச்சியம்மாளின் சொத்தில் அவரது வாரிசுகள் அனைவருக்கும் பங்கு உள்ளது என்றால் சரிதான். எனது மகள் பழனியம்மாள் உண்மை சங்கதிகளை மறைத்து மூன்று பங்கு மட்டுமே பேச்சியம்மாளின் சொத்தில் பிரிக்கப்பட வேண்டும் என்றும், அதில் தனக்கு ஒரு பங்கு வேண்டும் என்றும் வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சொன்னால் சரியல்ல.

7. நான் உண்மை சங்கதிகளை மறைத்து எனது மகனுக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மணிகண்டன் மற்றும் பழனிச்சாமி தனியாக தண்ணீர் இணைப்பு, மின்சார இணைப்பு வாங்கியுள்ளார்கள் என்றால் அது பற்றி

எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் வாதிகளுக்கு 1/3 பங்கு வராது என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.07.19 18:13:40 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.